
பக்கங்கள் 16+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 22 ஞாயிற்றுக்கிழமை 07.09.2025 | அதிர்வு 39

## மட்டக்களப்பில் ரயிலுடன் மோதி ஒருவர் மரணம்!

(கனகராசா சரவணன்)



கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற இரவு கடுகதி ரயிலுடன் 06▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# ராஜபக்ஷக்களின் கரங்களில் இரத்தக்கறை படியவில்லையாம்

### இப்படிக் கூறுகின்றார் நாமல் ராஜபக்ஷ



"ராஜபக்ஷக்களின் கரங்களில் இரத்தக்கறை படியவில்லை. சட்டவிரோதச் செயற்பாடுகளுக்குத் துணைபோகவில்லை. போதைப்பொருள் வியாபாரத்தை ராஜபக்ஷக்கள் மீது சுமத்த இடமளிக்கப் போவதில்லை."

– இவ்வாறு லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் 04▶

# வெள்ளைக்கொடி சம்பவம் மட்டுமல்ல அனைத்தையும் விசாரித்தே தீருவோம்

### ஆனால் உள்ளகப் பொறிமுறையின் பொறுப்பாளராக சர்வதேசம் இருக்கவே முடியாது என்கின்றார் பிரதமர்

"பொறுப்புக்கூறல் விசாரணைகளை முன்னெடுப்பது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையைத் திருப்திப்படுத்துவதற்காகவோ அல்லது மகிழ்விப்பதற்காகவோ அல்ல. எமக்கு வாக்களித்த மற்றும் வாக்களிக்காத மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கே கடமைப்பட்டுள்ளோம். இறுதிப் போரில் இடம்பெற்ற வெள்ளைக்கொடி மாத்திரமல்ல முன்னெடுக்கப்பட வேண்டிய எந்தவொரு விசாரணைகளுக்கும் எமது அரசு தடையாக இருக்காது." 04▶



## தம்பலகாமத்தில் பட்டாசு வெடித்து குடும்பஸ்தர் பலி!



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை, தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிப்பொத்பொத்தானை, 9ஆம் கொலனி, சதாம் நகர் பிள்ளையார் கோயி 06▶

## ஜெனிவா பறந்தார் விஜித ஹேரத்

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.45 மணியளவில் ஜெனிவாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடரில் கலந்துகொள்வதற்காக அவர் அங்கு சென்றுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரி 04▶





# செம்மணியில் இராணுவத்தால் கொலை செய்யப்பட்ட கிருஷாந்தியின் 29ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணியில் இராணுவத்தால் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட பின் படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசாமியின் 29 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று நடைபெற்றது.

செம்மணி சந்திப் பகுதியில் வடக்கு – கிழக்கு நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ச்சி▼





















# செம்மணியில் இராணுவத்தால் கொலை செய்யப்பட்ட கிருஷாந்தியின் 29ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு

**தொடர்ச்சி▲**

படுகொலை செய்யப்பட்ட கிருஷாந்தியின் மைத்துனன் சந்திரகாந்தன் மயூரன் மற்றும் உறவினர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

அத்தோடு “வாசலிலே கிருஷாந்தி” எனும் செம்மொழி தொடர்பான கவிதை நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது

இந்த நினைவேந்தல் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராஜா கஜேந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.














## ஜெனிவா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைகள் கூட்டத் தொடரில் இலங்கை அரசின் சார்பாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உரையாற்றவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது, ஜெனிவாவில் பல உயர்மட்ட இராஜதந்திரிகளுடன் விஜித ஹேரத் இரு தரப்பு கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்குக்கும் விஜித ஹேரத்துக்கும் இடையில் விசேட சந்திப்பும் நடைபெறவுள்ளது.

வோல்கர் டர்க், இலங்கைக்கு விஜயம் செய்த பின்னர் – தேசிய மக்கள் சக்தி அரசு ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் கழித்த பின்னர் நடைபெறும் இந்தக் கூட்டத் தொடரில், மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக புதிய அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்களை முன்வைக்க முடியும்.

---

## வெள்ளைக்கொடி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உண்மையில் உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாமையினால்தான் இலங்கை மீது ஜெனிவாக் குற்றச்சாட்டுக்களும் நெருக்கடிகளும் வலுப்பெற்றுள்ளன.

கடந்த ஆட்சியாளர்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குச் சென்று, வெறும் அறிக்கைகளைச் சமர்ப்பித்து வந்துள்ளார்களே தவிர அங்கு வழங்கும் உறுதிமொழிகளை உள்நாட்டில் நிறைவேற்றுவதில் ஆர்வம் செலுத்தவில்லை.

ஜெனிவாவில் மனித உரிமைகள் அமர்வுகள் நடக்கும் போது இலங்கையில் இருந்து செல்லும் தரப்பு அறிக்கையைச் சமர்பித்து விட்டு நாடு திரும்பியதும் அதனை மறந்து விடுகின்றனர். மறுபடியும் ஜெனிவா அமர்வுகள் ஆரம்பிக்கும் போது தான் வழங்கிய உறுதிமொழிகளும் அறிக்கையும் அவர்களின் நினைவுக்கு வருகின்றது. இதுவரை காலமும் இவ்வாறானதொரு நிலைமையே நாட்டில் இருந்துள்ளது.

சர்வதேசத்துடன் தொடர்புப்பட்ட விடயங்களாக இவற்றைக் கருதும் போது இதுவொரு தவறான அணுகுமுறையாகும். ஜெனிவா மனித உரிமைகள் விடயத்தில் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவது, கொள்கை ரீதியாகச் செயற்படுவது என்பது தொடர்பில் எமது அரசு ஏற்கனவே தீர்மானங்களை எடுத்துள்ளது. உதாரணமாக செம்மணி மனித புதைகுழி உட்பட பல சம்பவங்கள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஊடகங்களை அழைத்து சென்று அந்த விசாரணைகளைப் பிரசாரம் செய்ய வேண்டிய தேவை இல்லை.

மறுபுறம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எந்தவொரு விசாரணைக்கும் அரசு தடையாக இருக்கவில்லை என்பதை அனைவரும் புரிந்துக் கொள்ள வேண்டும்.

மனித உரிமைகள் சார்ந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆதாரங்கள் இருப்பின் முறைப்பாடு செய்யலாம். சுயா தீனமான விசாரணைகள் முன்னெடுக்கப்படும். ஆகவே, யாரையும் பாதுகாப்பதற்காக எமது அரசு கடமைப்பட்டில்லை.

அது மாத்திரமன்றி ஜெனிவாக் குற்றச்சாட்டுகளுக்கு அப்பால் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதே அரசின் முதன்மையான கடமையாக உள்ளது. எனவே, ஜெனிவா சக்கரத்தில் இருந்து முதலில் வெளிவர வேண்டும். பொறுப்புக்கூறல் விசாரணகளை முன்னெடுப்பது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையைத் திருப்திப்படுத்துவதற்காகவோ அல்லது மகிழ்விப்பதற்காகவோ அல்ல. மாறாக எமக்கு வாக்களித்த மற்றும் வாக்களிக்காத மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கே கடமைப்பட்டுள்ளோம். விசேடமாக இந்த அரசு அவர்களுக்கு உரியது என்பதைப் பாதிக்கப்பட்ட மக்கள் உணர வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி அரசின் கீழ் அனைத்து விசாரணைகளும் முன்னெடுக்கப்படும். இதுவே எமது நிலைப்பாடாகும். ஆனால், இதுவரை காலமும் அந்த விசாரணைகள் இடம்பெறவில்லை என்பது வேறு ஒரு விடயமாகும். செம்மணி மனிதப் புதைகுழி மாத்திரம் அல்ல வேறு பல மனித புதைக்குழிகள் குறித்து விசாரணைகள் இடம்பெறுகின்றன.

இந்த விசாரணைகள் ஊடாக பக்கச் சார்பின்றி நேர்மையாக அரசால் செயற்பட முடியும் என்பதனையும் , எந்தவொரு விசாரணையையும் முன்னெடுக்க முடியும் என்பதையும் வெளிப்படுத்தியுள்ளோம்.

இந்த விசாரணைகளுக்குத் தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்புகளைத் தேவைக்கு ஏற்ப சர்வதேசத்திடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், விசாரணைப் பொறிமுறைக்குப் பொறுப்பானவர்களாக இலங்கை இருக்க வேண்டும். மாறாக அந்தப் பொறுப்பில் சர்வதேசம் இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை நாங்கள் நிராகரிக்கின்றோம்.

எனவே, ஜெனிவா குற்றச்சாட்டுக்களில் நிபுணத்துவ ஒத்துழைப்புகளைச் சர்வதேசத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளவும் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படவும் தயாராகவே உள்ளோம். ஆனால், விசாரணைகளின் பொறுப்பாளர்களாக இலங்கை இருக்கும். இறுதிப் போரில் இடம்பெற்ற வெள்ளைக்கொடி மாத்திரமல்ல முன்னெடுக்கப்பட வேண்டிய எந்தவொரு விசாரணைகளுக்கும் எமது அரசு தடையாக இருக்காது." – என்றார்.

---

## ராஜபக்ஷக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறுகையில்,

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் தொடர்பில் பொலிஸார் மாறுபட்ட விடயங்களை குறிப்பிட்டுள்ளனர். முறையான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொள்ள வேண்டும். கட்சி மட்டத்தில் அந்த உறுப்பினரின் உறுப் புரிமை நீக்கப்பட்டுள்ளது. அரசியல் பழி வாங்கல் இல்லாமல் நடுநிலையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒழுக்கமாகவே நாங்கள் செயற்படுகின்றோம். கட்சியில் எவரேனும் உறுப்பினர் ஒழுக்கமற்ற வகையில் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். தனது அரசியல் நிலைப்பாட்டுக்கு இந்தச் சம்பவத்தை அரசு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது. நடுநிலையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டால் மாத்திரமே உண்மை வெளிவரும், நியாயம் கிடைக்கும்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் தமது பொறுப்பை சரிவரச் செய்யவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அரசின் உயர் பதவிகளில் உள்ளார்கள். பொறுப்பற்ற வகையில் செயற்பட்டமைக்கான பொறுப்பை அவர்கள் ஏற்காமல் அதனையும் பிறிதொரு தரப்பினர் மீது சுமத்துகின்றார்கள்.

சுங்கத்தில் இருந்து எவ்வித பரிசோதனைகளுமின்றி விடுவிக்கப்பட்ட கொள்கலன்கள் தொடர்பில் பொலிஸாருக்கு முன்கூட்டியதாகவே தகவல்கள் கிடைத்திருந்ததா? வெளிநாட்டுப் புலனாய்வுப் பிரிவு இந்தக் கொள்கலன்கள் தொடர்பில் ஏதேனும் அறிவித்திருந்ததா?

நுவரெலியா பகுதியில் ஐஸ் போதைப் பொருள் உற்பத்தி நிலையம் நடத்திச் செல்லப்பட்டுள்ளது என்று தற்போது குறிப்பிடப்படுகின்றது. இந்த இடம் யாருக்குச் சொந்தமானது என்பதை அரசு பகிரங்கப்படுத்த வேண்டும். இலங்கையைப் போதைப்பொருள் மையமாக மாற்றியமைக்க வேண்டாம் என்று அரசிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

ராஜபக்ஷக்களின் கரங்களில் – மொட்டுக் கட்சியினரின் கரங்களில் இரத்தக்கறை படியவில்லை. சட்டவிரோதச் செயற்பாடுகளுக்கு நாங்கள் ஒருபோதும் துணைபோகவில்லை. ஆகவே,நாங்கள் திணறப் போவதில்லை என்று அரசிடம் குறிப்பிட்டுக்கொள்கின்றோம்.

முறையான மற்றும் நடுநிலையான விசாரணைகளை மேற்கொண்டு உண்மையை வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கு உண்டு. போதைப்பொருள் வியாபாரத்தை ராஜபக்ஷக்கள் மீது சுமத்த இடமளிக்கப் போவதில்லை. உண்மையை வெளிப்படுத்தும் வரை அரசுக்கு அழுத்தம் பிரயோகிப்போம்." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வெளிப்படுத்துங்கள்!

மெதப்பொட்டமைன் எனப்படும் மிக மோசமான போதைப் பொருளான ஐஸ் பளிங்குகள் வெளிநாட்டில் உற்பத்தியாகி, பாதாள உலகக் குழுக்களினால் கடத்தி வரப்பட்டு, இங்கு விநியோகிக்கப்படுகின்றன என்றே இதுவரை நம்பப்பட்டு வந்தது.

ஆனால் அந்த நம்பிக்கையைத் தகர்க்கும் விதத்தில் ஐஸ் போதை பொருள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுவது பற்றிய அதிர்ச்சித் தகவல் இப்போது வெளியாகியிருக்கின்றது.

அந்தப் போதைப் பொருள் தயாரிப்புக்காக இரண்டு பாரிய கொள்கலன்களில் எடுத்துவரப்பட்ட ஐம்பதாயிரம் கிலோ இரசாயன மூலப் பொருள்கள் இப்போது பாதுகாப்புத் தரப்பிடம் சிக்கி இருக்கின்றன.

அது மட்டுமல்லாமல், அந்த மூலப் பொருள்களை வைத்துக் கொண்டு நுவரெலியாவில் ஐஸ் போதை பொருள் உற்பத்தித் தொழில் நடைபெற்றமை பற்றிய தகவலும் பொலிஸ் தரப்பினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அந்த வேலையில் பாகிஸ்தான் நாட்டவர்கள் இருவர் ஈடுபட்டமை தெரியவந்துள்ளது.

இப்படி இரண்டு கொள்கலன்களில் ஐஸ் உற்பத்திக்குத் தேவையான இரசாயனப் பொருள்கள் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டமை தொடர்பான செய்தியையும், அண்மையில் 323 கொள்கலன்கள் உரிய சுங்கப் பரிசோதனை இன்றி தேசிய மக்கள் சக்தி அரசினால் அவசர அவசரமாக நாட்டுக்குள் அனுமதிக்கப்பட்டமையையும் தொடர்புபடுத்தி செய்திகள் வெளியானமையை அடுத்து, அதை விழுந்தடித்துக் கொண்டு மறுத்திருக்கின்றது பொலிஸ்.

அப்படி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்களின் இலக்கங்களும், இப்போது போதைப் பொருள் தயாரிப்புக்கான இரசாயன மூலப் பொருள் அடங்கி இருந்த கொள்கலன்களின் இலக்கங்களும் வேறு வேறானவை என்று பொலிஸ் தரப்பின் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எவ். யு. வூட்லர் தெரிவித்திருக்கிறார்.

நல்லது. அவ்வாறு சுங்கப் பரிசோதனை இல்லாமல் வெளியேற அனுமதிக்கப்பட்ட கொள்கலன்கள் தொடர்பில் பெரும் சர்ச்சை ஏற்பட்டு, அவற்றில் ஆயுதங்கள் மற்றும் நாட்டுக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய பொருள்கள் எடுத்துவரப்பட்டதான குற்றச்சாட்டு நாடாளுமன்றத்திலேயே பரபரப்பாகக் கிளப்பப்பட்ட பின்னரும், அந்தக் கொள்கலன்களில் எடுத்து வரப்பட்டிருக்கக்கூடிய மோசமான பொருகளை அந்த இலக்கங்களைக் கொண்ட அதே கொள்கலன்களில் தொடர்ந்தும் பேணி வைத்திருப்பதற்கு அவற்றைக் கடத்தியவர்கள் அவ்வளவு தூரம் முட்டாள்களா என்ற ஒரு கேள்வியும் எழுகிறது.

சரி. பொலிஸார் கருதுவது போல அவர்கள் அவ்வளவு தூரம் முட்டாள்களாகவே இருந்தார்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்படியானால் இப்போது கண்டு பிடிக்கப்பட்ட - போதைப் பொருள் தயாரிப்புக்கான இரசாயன மூலப் பொருள் அடங்கி இருந்த - கொள்கலன்களின் இருக்கின்ற இலக்கங்களை வைத்து, அவை எப்போது, யாரால் நாட்டுக்குள் கடத்திவரப்பட்டன என்பதை பொலிஸார் விரைந்து வெளிப் படுத்துவதுதான் இப்போதைய அவர்களின் மறுப்புக்கு சற்றேனும் ஆதாரம் தருவதாக - உறுதிப் படுத்துவதாக - இருக்கும் என்பதைப் பொலிஸாருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

## தம்பலகாமத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லில் இடம்பெற்ற திருவிழா ஊர்வலத்தின் போது பட்டாசு வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கணபதிப் பிள்ளை காளிராசா (வயது 45) என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

திருவிழா ஊர்வலத்தின் போது பட்டாசு கொளுத்திய நிலையில் ஒரு பட்டாசு வெடிக்காத நிலையில் உள்ளதைக் கண்டு மேற்படி நபர் அதனைக் காலால் தடவிய போது பட்டாசு வெடித்துள்ளது என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தம்பலகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று சந்திவெளி பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

சந்திவெளி. ஜீவநகர் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை யான வரதராஜா கிருஷ்ணகாந்தன் (வயது 28) என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் நேற்று சனிக்கிழமை இரவு மது போதையில் தண்டவாளத்தில் தலையை வைத்துத் தூங்கியதால் ரயில் மோதி தலை துண்டிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

சடலம் ஏறாவூர் ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு பின் இன்று காலை வாழைச்சேனை ஆதார வைத்திய சாலைக்கு உடற்கூற்றுப் பரிசோதனைக் காகக் கொண்டு வரப்பட்டது.

விபத்து தொடர்பில் சந்திவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# மகாத்மா காந்தி ஆச்சிரம ஏற்பாட்டில் இளைஞர்களுக்கான கருத்தரங்கு





மகாத்மா காந்தி ஆச்சிரமத்தின் ஏற்பாட்டில் “நடைமுறையில் காந்தியக் கொள்கை” என்ற தலைப்பிலான இளைஞர்களுக்கான கருத்தரங்கு யாழ். மாவட்ட சர்வோதய நிலையத்தில் நேற்று ஆசிரம அறங்காவலர் த.நந்திவர்மன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கருத்தமர்வில் மதுரையைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர் க.பழனித்துரை சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளரும் காந்தீயம் பத்திரிகை ஆசிரியருமான எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி மற்றும் ஓய்வுநிலை அதிபர் செ.சுப்பிரமணியம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கருத்தமர்வில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டன.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் மூத்த உறுப்பினர் அமரர் சரஸ்வதி தம்பிப்பிள்ளை நினைவாக இந்தக் கருத்தமர்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

# விடத்தற்பளை கமலாசனி வித்தியின் முத்தமிழ் விழாவும் வள்ளுவர் தினமும்

## வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெற்றன







விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய அதிபர் இ. நாகேந்திரன் தலைமையில் நடைபெற்ற விழாவில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய நிர்வாக அலகின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க. ஸ்ரீகுமரனும் சிறப்பு விருந்தினராக வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி விஜிதா சுனில் ஆரியரத்னவும் மதிப்புறு விருந்தினர்களாக கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி ஆசிரியர் சி .சுந்தரமூர்த்தி. வித்தியாலய ஓய்வு நிலை ஆசிரியை திருமதி மா.கந்தையா ஆகியோரும் கலந்து கொண்டனர்

# தற்கொலைக்கு எதிரான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சைக்கிளோட்டம்









தற்கொலைகளைத் தடுக்கும் வகையில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட தொடர் சைக்கிளோட்டம், திருகோணமலையை நேற்று சனிக்கிழமை பிற்பகல் வந்தடைந்தது.

இந்தத் தொடர் சைக்கிளோட்ட வீரர்களை திருகோணமலை றோட்டரிக் கழக அங்கத்தவர்கள் வரவேற்றனர்.

சிசி 1333 என்னும் இலவச ஆலோசனை வழங்கும் தொலைபேசி இலக்கத்தை பொது மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்துவதை நோக்காக கொண்டு இலங்கையின் 12 மாவட்டங்களை உள்ளடக்கியதாக தொடர் சைக்கிள் ஓட்ட நிகழ்வை நடத்தி வருகின்றனர்.

இத் தொடர் சைக்கிளோட்டமானது திருகோணமலைக்கு வந்தடைந்ததன் பின்னர் நகரின் பிரதான பேரூந்து நிலையத்தில் தற்கொலையின் தாக்கம் குறித்து மக்களை விழிப்பூட்டும் முகமாக நிகழ்ச்சி ஒன்று இன்று மாலை நடத்தப்பட்டது.

அத்துடன் தற்கொலை மனப்பாங்கை நீக்கக்கூடிய ஆலோசனைகள், 1333 என்ற தொலைபேசி இலக்கம் அடங்கிய கையேடுகளும் இதன்போது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

# தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் திருவிழா காலத்து ஆன்மீக அருளுரை நிகழ்வு!





தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆலய திருவிழாவை முன்னிட்டு, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரமத்தின் நாளாந்த நிகழ்வாக அருளுரை இடம்பெற்று வருகின்றது.

“மனிதனுடன் ஆன்மீகமும் உளவியலும்” என்ற பெரும்பொருளில் ஆன்மீக அருளுரையைத் திருமதி சிறிமேனன் வினோதினி (யாழ்ப்பாணம்,தேசிய இளைஞர் சேவை மன்றம்) நிகழ்த்தினார்.



### சுகாதாரத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில்

# அரசு நாட்டில் ஐந்து வைத்தியசாலைகளை நவீனமயப்படுத்தத் திட்டங்கள் தீட்டியுள்ளது!

(ஹஸ்பர் ஏ.எச்.)

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தால் இலங்கையில் உள்ள 15 அரச வைத்தியசாலைகளுக்கு வழங்கும் அதிநவீன தொற்று கழிவு எரியூட்டிகளின் அலகுகள் நிறுவப்படவுள்ளன.

இதன் முதலாவது அலகை திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையில், நிறுவுவதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் (5) இடம்பெற்றது.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடகத் துறை அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில், கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகர, வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா மற்றும் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகியோ இசோமாட்டா ஆகியோரின் பங்கேற்புடன் இது தொடங்கி வைக்கப்பட்டது.

இதன் போது அமைச்சர் உரையாற்றுகையில், ஜப்பான் நாட்டு மக்களின் நிதி உதவியுடன், கிழக்கு மாகாணத்துக்கான 8 மாடி கட்டடங்களை கொண்ட பிரதான இருதய சத்திர சிகிச்சைப் பிரிவு திருகோணமலையில் அமையவுள்ளது. இன்னும் ஆறு மாதங்களில், அதற்கான நிர்மாண பணிகள் ஆரம்பிக்கப்படும்.

சுகாதாரத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில், அரசு நாட்டில் ஐந்து வைத்தியசாலைகளை நவீனமயப்படுத்த திட்டங்கள் தீட்டியுள்ளது. அதில் திருகோணமலை வைத்தியசாலையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, நாட்டில் உள்ள 15 அரச வைத்தியசாலைகளுக்கு அதிநவீன தொற்று கழிவு எரியூட்டிகளின் அலகுகள் நிறுவப்படவுள்ளன. அதில் இன்று, திருகோணமலை வைத்தியசாலையிலே முதலாவதாக ஆரம்பித்துள்ளோம். இதுவும் நாட்டின் சுகாதாரத் துறையை மேம்படுத்தும், அரசின் திட்டத்துக்கு அமையவே ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பண்டாரநாயக்கா சர்வதேச விமான விமான நிலைய அபிவிருத்தி திட்டம், கண்டி நகர கழிவு நீர் முகாமைத்துவ திட்டம், கொத்மலை நீர் சுத்திகரிப்பு திட்டம் உள்ளிட்ட அநேக நீர் மற்றும் வீதி அபிவிருத்திகள் ஆகியவற்றுக்கு ஜப்பானிய அரசு அதிகமான உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்கிக் கொண்டிருக்கின்றது. இதற்காக அந்த அரசுக்கும் நாட்டு மக்களுக்கும், இலங்கை மக்கள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.- என்றார்.

வைத்தியசாலையில் இயங்கி வரும், இருதய சிகிச்சை பிரிவையும் அமைச்சர் சென்று பார்வையிட்டதோடு, அவற்றின் செயற்பாடுகளையும் கேட்டு அறிந்து கொண்டார்.

இந்த நிகழ்வில், சுகாதார அமைச்சின் செயலாளர் நாயகம் அசேல குணவர்த்தன, ஜெயிகா நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி கெஞ்சு குருநோமோ, திருகோணமலை பொது வைத்தியசாலை பணிப்பாளர் நாயகம் சந்தமாலி, கிழக்கு மாகாண அமைச்சர்கள், கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்கள ஊழியர்கள், மற்றும் திருகோணமலை பொது வைத்தியசாலை ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ் லெட்டரின் மகிழ்ச்சிப்பகிர்வில் ஊடகர் சகாதேவராஜா கௌரவிப்பு






தமிழ் லெட்டர் நிறுவனத்தின் "மகிழ்ச்சிப்பகிர்வு" நிகழ்வு அதன் தலைவர் ஏ.எல். றமீஸ் தலைமையில் அட்டாளைச்சேனையில் வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

இதில் ஊடகப் பணியில் 40 வருடகாலமாக அர்ப்பணிப்புமிக்க சேவையாற்றி வரும் வித்தகர் விபுலமாமணி வீ.ரி. சகாதேவராஜா பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

அக்கரைப்பற்று மாநகர சபையின் பிரதி முதல்வர் யு.எல்.உவைஸ் மற்றும் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சின் செயலாளர் கலாநிதி எம். கோபாலரெத்தினம். ஆகியோர் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர்.




# மன்னாரில் இரண்டாம் கட்டக் காற்றாலை தொடர்பாக அமைச்சர் மக்களுடன் சந்திப்பு

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் தீவு பகுதியில் புதிதாக இரண்டாம் கட்டமாக அமைக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரங்கள் தொடர்பாக குறித்த பகுதி மக்களுடன் எரிசக்தி அமைச்சர் பொறியியலாளர் குமார ஜெயக்கொடி தலைமையிலான குழுவினர் வெள்ளிக்கிழமை கலந்துரையாடினர்.

இரண்டாம் கட்டமாக சவுத்பாரில் 01 காற்றாலையும் தாழ்வுபாட்டில் 02 காற்றாலைகளும் தோட்டவெளியில் 02 காற்றாலைகளும் ஓலைத்தொடுவாயில் 06 காற்றாலைகளும் பேசாலையில் 02 காற்றாலைகளும் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நிலையில் குறிப்பிட்ட இந்தத் தினத்தில் இந்தப் பகுதி மக்களை அவர்களின் கிராமங்களுக்குச் சென்று சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தனர்.

இந்த சந்திப்பின்போது வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் காதர் மஸ்தான், செல்வம் அடைக்கலநாதன், மன்னார் மாவட்ட அரச அதிபர், மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மன்னார் தீவில் காற்றாலை அமைத்தல் மற்றும் கனியவள மணல் அகற்றல் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என்று மன்னார் மக்கள் ஒரு மாதகாலமாக தொடர்ச்சியான போராட்டங்களை மன்னார் நகரில் ஒன்றுகூடி இராபகலாக நடத்தி வருகின்றனர். இந்த நிலையிலே அமைச்சர் தலைமை கொண்ட குழு மன்னாருக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தது.

இன்றைய அரசு ஆட்சிக்கு வருமுன்னர், இன்றைய ஜனாதிபதி இந்த மக்களுக்கு கனியவள மணல் அகழ்வு மற்றும் காற்றாலைகள் அமைத்தல் நிறுத்தப்படும் என்ற உத்தரவாதம் வழங்கியிருந்தார். ஜனாதிபதி கூறிய வாக்குறுதியை உடன் நிறைவேற்ற வேண்டும் என்றே இந்த மன்னார் மக்கள் போராடி வருகின்றனர்.

இதன்போது அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் மக்களுடன் கலந்துரையாடிய போது மக்கள் தமது கிராமங்களுக்குள் புதிதாக அமைக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரங்கள் தேவை இல்லை எனவும் குறித்த காற்றாலை மின் கோபுரங்களை அமைக்கத் தாம் எதிர்ப்புத் தெரிவிப்பதாகக் கூறினர்.

மன்னார் தீவில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 30 காற்றாலை மின் கோபுரங்களால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் எனவும் மீனவர்கள் தொழிலை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினர் .

தமது கிராம மக்கள் நிம்மதியாக வாழ வேண்டுமாக இருந்தால் காற்றாலை கோபுரங்களை மன்னார் தீவில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்ததோடு எமது பகுதிக்குள் காற்றாலை அமைக்க ஒருபோதும் அனுமதி வழங்க மாட்டோம் எனவும் தெரிவித்தனர்.

மேலும் எமது வாழ்விடங்களை பறிக்கும் எமது மனித உரிமைகளை மீறும் எங்களையும் எங்கள் வருங்கால சந்ததிகளையும் ஊணமாக்கும் நோயாளிகளாக மாற்றும் எமது மண்ணை பாலைவனமாக்கும் எமது வளங்களை சூறையாடும் மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளும் மனித குலத்துக்கு எதிரான திட்டங்கள் அனைத்தையும் உடன் நிறுத்தி இலங்கை மக்களாகிய நாம் எல்லோரும் கௌரவத்துடனும் மரியாதையுடனும் நலத்துடனும் வாழ உறுதியளிக்க வேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கனிய மண் அகழ்வுகளை மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளும் உடன் நிறுத்தி அந்தத் திட்டத்தை மன்னார் மாவட்டத்தில் இருந்து அகற்றுமாறும் மக்கள் அமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

அமைச்சர் இவர்களிடம் தனது கருத்தை முன்வைக்கையில்,

ஏற்கனவே இக்காற்றாலைகள் அமைக்கும் விடயமானது முன்னிருந்த அரசால் மேற்கொள்ளப்பட்டது.

இது விடயமாக அன்று மக்கள் முன்வைத்த விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதியால் ஏற்படுத்தப்பட்ட நிபுணர்த்துவக் குழு ஒரு மாத காலமாக ஆய்வுகளை மேற்கொண்டிருந்தது. தற்பொழுது கண்டுள்ள குறைகளை நிவர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகளை நாம் முன்னெடுக்கின்றோம்.

இவற்றை எல்லதம் நிவர்த்தி செய்து மக்களின் சம்மதத்துடனே நாம் இந்தத் திட்டத்தை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம் என்று அமைச்சர் மக்கள் முன் தெரிவித்தார்.

இதன்போது அனைத்து இடங்களிலும் மக்கள் ஒருமித்தக் குரலில் எக்காரணம் கொண்டும் காற்றாலையையும் கனிய வள மணல் அகழ்வையும் மன்னார் தீவில் நிறுத்திக் கொள்ளவும். வேறெந்த கருத்துக்களையும் எங்களிடம் தெரிவிக்க வேண்டாம் என்று அமைச்சரிடம் மக்கள் தெரிவித்தனர்.





# நபிகள் பிறந்த தினத்தை முன்னிட்டு மன்னார் ஆஸ்பத்திரிக்கு அன்பளிப்பு








(வாஸ் கூஞ்ஞ)

முஹம்மது நபி (ஸல்) பிறந்த தினத்தை முன்னிட்டுக் கடந்த வெள்ளிக்கிழமை (05) அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா மன்னார் நகரக் கிளையானது மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் விடுதிக்கு தேவையாக காணப்பட்ட புத்தக அலுமாரி – விடுதியில் அனுமதிக்கப்படுகின்ற நோயாளிகளின் பாதுகாவலர் தங்குவதற்கான படுக்கை விரிப்பு மற்றும் சிறுவர் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த சிறுவர்களுக்கு சிறு அன்பளிப்பு பொருள்கள் ஆகியவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

இந்த நிகழ்வானது அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா மன்னார் நகரக் கிளையின் தலைவர் அஷ்ஷேஹ் அஸீம் (அத்லி) தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் பிரதிப் பணிப்பாளர், வைத்திய சாலையின் அபிவிருத்திக் குழுவினர் வைத்தியசாலை ஊழியர்கள் வைத்தியசாலையின் பள்ளிவசல் நிர்வாகிகள் அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா மன்னார் நகரக் கிளையின் உறுப்பினர்கள் அகில இலங்கை ஜம்இய்யது உலமா முசலிக் கிளையின் தலைவர் அஷ்ஷேஹ் றிஸ்வான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா மன்னார் நகரக் கிளையின் தலைவர் அஷ்ஷேஹ் அஸீமால் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் நற்குணங்கள் பற்றி விசேட உரை நிகழ்த்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கற்பிட்டி பிரதேச செயலகத்தில் ஜனாதிபதி நிதியம் உதவித் திட்டம்!



(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

ஜனாதிபதி நிதியம் உதவித் திட்டம் பிரதேச மட்டம்வரை விஸ்தரிப்பு எனும் வேலைத்திட்டத்தின் ஊடாக கற்பிட்டி பிரதேச செயலகத்தில் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பயனாளிக்கான உதவி வழங்கும் நிகழ்வு கற்பிட்டி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் பீ.ஜீ.எஸ்.என் பிரியதர்ஷினி தலைமையில் இடம்பெற்றது .

ஜனாதிபதி நிதியத்தின் பல்வகைப்படுத்தலில் ஒரு முக்கியமான மைல்கல்லைக் குறிக்கும் வகையில் முதலாவது பயனாளியாக பள்ளிவாசல்துறை கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் ஏ.ஏ.எம். ஹாலிடீன் தெரிவு செய்யப்பட்டு அவருக்கு இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவுக்கான காசோலை கற்பிட்டி பிரதேச செயலாளரால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கற்பிட்டி பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் எஸ் மர்ஜானா மற்றும் சமூக சேவை பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எம்.எஸ் பானு ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வானது ஜனாதிபதி நிதியத்தின் பணிகள் பிரதேச மட்டத்துக்கு வெற்றிகரமாக விரிவுபடுத்தப்பட்டுள்ளதற்கான சான்றை உறுதிப்படுத்துகின்றது. மேலும் தகுதியான குடிமக்களுக்கு நேரடியான மற்றும் பரவலாக்கப்பட்ட ஆதரவை வழங்குவதை நோக்காக கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியா ஊடகவியலாளர் ஒன்றியத்தின் புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு!




(பொகவந்தலாவை)

நுவரெலியா மாவட்ட ஊடகவியலாளர் ஒன்றியத்தின் 25 ஆவது ஆண்டு பொதுக் கூட்டம் நேற்று சனிக்கிழமை காலை ஹட்டன் லா எடம்ஸ் ஹோட்டலில் அதன் தலைவர் டக்ளஸ் நாணயக்கார தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது அடுத்த நிர்வாக ஆண்டுக்கான புதிய நிர்வாக சபையினர் தெரிவு செய்யப்பட்டனர்.

கடந்த இரு தசாப்தங்களாக தலைவராக செயற்பட்டு வந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் டக்ளஸ் நாணயக்கார ஒன்றியத்தின் சிரேஷ்ட காப்பாளராக தெரிவு செய்யப்பட்ட அதேவேளை முன்னாள் செயலாளர் காமினி பண்டார இலங்கன் திலக்க சிரேஷ்ட ஆலோசகராகத் தெரிவு செய்யப்பட்டார்.

புதிய நிர்வாக சபையின் தலைவராகச் சிரேஷ்ட ஊடகவியலாளர் தியாகு சுப்ரமணியம், செயலாளராக ஊடகவியலாளர் சுதத் செல்லஹேவா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். ஊடகவியலாளர் எம்.ராமச்சந்திரன் மீண்டும் பொருளாளராகதெரிவுசெய்யப்பட்டார்.உபதலைவராகஜி.வீரக்கொடிமற்றும்உபசெயலாளராக டி.சந்திரமோகன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். சிரேஷ்ட ஊடகவியலாளர் சிவலிங்கம் சிவகுமாரன் ஒன்றியத்தின் தேசிய அமைப்பாளராக தெரிவு செய்யப்பட்டார்.

பதினொரு பேர் கொண்ட நிர்வாக சபையில் மேற்படி தெரிவு செய்யப்பட்ட ஆறு பேர் உட்பட பானா தங்கம், சுரேஜ் ரொஜிஸ்டர், இந்திக்க ரொஷான், செ.தி. பெருமாள், சதீஸ்குமார் ஆகியோர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

# சம்மாந்துறை பொலிஸார் ஏற்பாடு செய்யப்பட்ட வாகன சாரதிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்வு!







(தில்சாத் பர்வீஸ் )

சம்மாந்துறை பொலிஸாரின் ஏற்பாட்டில் கனரக வாகன சாரதிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

வாகனங்களால் பயணிகளுக்கு விபத்து ஏற்படும் வகையில் ஆபத்தான முறையில் பொருத்தப்பட்டுள்ள உதிரிபாகங்களை அகற்றவும், ஹேண்ட் பிரேக், சிக்னல் விளக்குகள், முகப்பு விளக்குகள் உள்ளிட்ட மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தில் வாகனம் ஒன்றை இயக்குவதற்கு விதிக்கப்பட்டுள்ள 21 விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது, பழுதடைந்த வாகனங்கள் சில பொலிஸாரால் அவதானிக்கப்பட்ட நிலையில், குறைபாடுகளை சரிசெய்ய சாரதிகளுக்கு 14 நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டது.

சாரதிகள் தங்களது வாழ்க்கையையும், பிறர் வாழ்வையும் பாதுகாக்க பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டியதன் முக்கியம் பற்றி பொலிஸ் அதிகாரிகளால் அறிவுரைகளும் வழங்கப்பட்டன.

பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு செல்லும் நேரத்திலும், முடிவடையும் நேரத்திலும் வாகனங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் எனவும் அறிவுரைகள் வழங்கியதுடன் இதனை மீறும் சாரதிகளுக்கு எதிராகக் கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

போக்குவரத்து ஒழுங்கும், விபத்துகளைக் குறைக்கும் நோக்கில் இவ்விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறும் என சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விழிப்புணர்வு நடவடிக்கையானது, கிழக்கு மாகாண சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜெயசுந்தரவின் ஆலோசனைக்கு அமைய, அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் சுஜித் வெதமுல்ல மேற்பார்வையில், அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.பி.எச்.கலனசிறி கட்டளையின் பிரகாரம், அம்பாறை மாவட்ட கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அஸார் நெறிப்படுத்தலில், சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலதின் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம். நௌபர், சம்மாந்துறை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி விஜேரத்ன, போக்குவரத்து பிரிவு பொலிஸார் என பலரும் கலந்து கொண்டனர்.



# ‘உயிர்காப்புக்கு ட்ரோன் தொழிநுட்பம்’ தென்கிழக்குப் பல்கலையில் விழிப்புணர்வு!

(பாறுக் ஷிஹான்)

அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகள் மற்றும் அவசர காலங்களில் நவீன தொழிநுட்பங்களை, குறிப்பாக ட்ரோன் (Drone) தொழிநுட்பத்தை, உயிர்காப்பு நோக்கில் பயன்படுத்துவது தொடர்பாக ஒரு நாள் செயல்விளக்கம் மற்றும் பயிற்சி நெறி, தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கலை கலாச்சார பீட உள்ளக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வை சம்மாந்துறை அல்-உஸ்வா உயிர்காப்பு நிலையம் மற்றும் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. இது, அல் உஸ்வா இஸ்லாமிக் அமைப்பின் தலைவர் மற்றும் அல் உஸ்வா மகளிர் அரபுக் கல்லூரியின் செயலாளர் அல்ஹாஜ் ஐ.எல். எம். முஸ்தபா மௌலவியின் வழிகாட்டுதலின் கீழ் நடத்தப்பட்ட 20 ஆவது பயிற்சி வகுப்பாகும்.

நிகழ்வு, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி எஸ்.எம். ஜுனைடீனின் அனுமதியுடன், புவியியல் துறைத்தலைவர் கலாநிதி ஐ.எல். முகம்மட் சாகிர் முன்னின்று வழிநடத்தினார்.

கலை கலாச்சார பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில், அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையப் பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி. றியாஸ், சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல் லாஹ், அல்ஹாஜ் ஐ.எல்.எம். முஸ்தபா மௌலவி, கலாநிதி ஐ.எல். முகம்மட் சாஹிர் ஆகியோர் தங்களது பார்வைகளையும் அனுபவங்களையும் பகிர்ந்து, பயிற்சியாளர்களை உற்சாகப்படுத்தினர்.

அனர்த்தங்களில் ஏற்படும் உயிரிழப்புகளை குறைத்து, மீட்பு நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள ரோன் தொழிநுட்பத்தின் பங்கு பற்றி அனைவரும் வலியுறுத்தினர். புதிய தலைமுறையினர் இந்த தொழிநுட்பங்களைக் கையாளும் திறனுடன் உருவாக வேண்டும் என்பதும் அவர்களது உரைகளில் பிரதிபலித்தது.

நிகழ்வின் தொழில்நுட்ப அம்சங்களை சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எச்.எம். றினோஸ் மற்றும் விரிவுரையாளர் ஏ.எல். ஐயூப் ஆகியோர் நேரடியாக விளக்கினார்கள். அவர்கள் ரோன் இயந்திரங்களின் செயல்பாடு, அவற்றின் வழியாக தரவுகளைத் திரட்டும் முறைகள், மெய்நிகர் வரைபட தயாரிப்பு, மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் அவற்றின் முக்கிய பங்கு உள்ளிட்ட விடயங்களை விளக்கினர்.








# மத்தியஸ்தர் சபை உறுப்பினருக்கான நியமனக் கடிதங்கள் வழங்கிவைப்பு



(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி மத்தியஸ்தர் சபையின் புதிய தலைவர், உப தலைவர் தெரிவும் புதிய உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வும் கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றன.



இந்த நிகழ்வின் அதிதிகளாக மத்தியஸ்தர் சபை ஆணைக்குழுவின் பயிற்சி உத்தியோகத்தர் ஜே.எச். திமுத் இசுர, கற்பிட்டி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ். மர்ஜானா, கற்பிட்டி பிரதேச செயலகத்தின் நிர்வாக கிராம அதிகாரி பீ.எம்.எம். பைனஸ், புத்தளம் மாவட்ட செயலகத்தின் மத்தியஸ்தர் சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் என். அருனராஜ், கற்பிட்டி பிரதேச செயலக மத்தியஸ்தர் சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.எம்.டீ. பர்ணாந்து ஆகியோர் கலந்து கொண்டனர்.

கற்பிட்டி மத்தியஸ்தர் சபையின் தலைவராக எதிர்வரும் மூன்று (2025 - 2028) வருட காலத்துக்கு, கடந்த 35 வருடங்கள் மத்தியஸ்தர் சபையின் உறுப்பினராகவும் சுமார் ஐந்து வருடங்களுக்கு மேலாக உப தலைவராக கடமையாற்றிய கற்பிட்டி ரோமன் கத்தோலிக்க தமிழ் பாடசாலையின் அதிபர் டபள்யூ.பீ. சகீலா தெரிவு செய்யப்பட்டுள்ளார். உபதலைவராக கற்பிட்டி பிரதேச செயலகத்தில் திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் ஜீ.வீ அனுசா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# அரச,அரச சார்பற்ற அலுவலர்களுக்கான மத்தியஸ்தம் தொடர்பாகத் தெளிவூட்டல்





(பாறுக் ஷிஹான்)

மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் (Ministry of Justice - Mediation Boards Commission) ஏற்பாட்டில் கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட அரச, அரச சார்பற்ற அலுவலர்களுக்கான மத்தியஸ்தம் தொடர்பில் தெளிவூட்டும் கருத்தரங்கு பிரதேச செயலாளர் பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் தலைமையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்முனை வடக்கு பிரதேச செயலக மத்தியஸ்த அபிவிருத்தி உத்தியோகத்தர் கந்தசாமி அருட்பிரசாந்தன் ஒருங்கிணைப்பில் மட்டு அம்பாறை மாவட்ட மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் இந்த நிகழ்வில் வளவாளராக கலந்து கொண்டார்.

மத்தியஸ்தம் தொடர்பான விளக்கம் அதன் நடைமுறைகள் மற்றும் மத்தியஸ்த சபை மூலமாக கையாளப்படும் பிணக்குகள் மத்தியஸ்த சபையின் வளர்ச்சி என பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் பொது மக்களுக்கான தெளிவூட்டல்களை வழங்கினர்.

அத்துடன் மத்தியஸ்தம் தொடர்பில் முரண்பாடுகளை தீர்ப்பது தொடர்பாகவும் பயிற்சியும் வழங்கப்பட்டது. எதிர்கால சமுதாயம் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் தொடர்பாகவும் விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. மத்தியஸ்தம், மத்தியஸ்த வரலாறு , முரண்பாடு, முரண்பாட்டு தீர்வின் முக்கியத்துவம், தொடர்பாடல், கலந்துரையாடல், மத்தியஸ்த படிமுறைகள் தொடர்பிலும் தெளிவூட்டப்பட்டது.

# ஸ்டாலினின் ஜெர்மனி, இங்கிலாந்து பயணத்தால் தமிழகத்துக்கு 15,516 கோடி ரூபா முதலீடு ஈர்ப்பு



முதல்வர் ஸ்டாலினின் ஜெர்மனி, இங்கிலாந்து பயணத்தால் தமிழகத்துக்கு 15,516 கோடி இந்திய ரூபா முதலீடுகள் ஈர்க்கப்பட்டன.

லண்டனில் முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில், இந்துஜா குழுமத்துடன் 7,500 கோடி இந்திய ரூபா முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதல்வரின் ஜேர்மனி, இங்கிலாந்து பயணம் மூலமாக தமிழகத்துக்கு 15,516 கோடி இந்திய ரூபாவுக்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில்,

“தமிழகத்துக்கு முதலீடுகளை ஈர்க்கும் விதமாக ‘டிஎன் ரைசிங்’ என்ற பெயரில் முதல்வர் ஸ்டாலின் ஐரோப்பிய நாடுகளுக்கு சென்றுள்ளார். முதல்கட்டமாக ஜேர்மனிக்கு சென்ற முதல்வர் அங்கு முதலீட்டாளர்கள், தொழில் நிறுவன நிர்வாகிகளை சந்தித்தார். இதை தொடர்ந்து, 26 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 7,020 கோடி இந்திய ரூபாவுக்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டன. இதன்மூலம் 15,320 பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜேர்மனியை தொடர்ந்து, தற்போது இங்கிலாந்தில் முதல்வர் ஸ்டாலின் பயணம் மேற்கொண்டுள்ளார். அவரது தலைமையில் ‘டிஎன் ரைசிங் ஐரோப்பா’ முதலீட்டாளர்கள் சந்திப்பு லண்டனில் நடைபெற்றது. இதில், இங்கிலாந்தை தலைமையிடமாக கொண்டு லண்டனில் இயங்கி வரும் இந்துஜா குழுமம், மின்சார வாகனங்களுக்கான செல், பேட்டரி உற்பத்தி,பி.இ.எஸ்.எஸ். (பேட்டரி எரிசக்தி சேமிப்பு அமைப்பு) மற்றும் மின்சார சார்ஜிங் நிலையங்களுக்கான வணிகங்களில் 7,500 கோடி இந்திய ரூபா முதலீடு செய்ய தமிழக அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இதன்மூலம் மின்சார வாகன சுற்றுச்சூழல் அமைப்பை விரிவுபடுத்தி 1,000 இற்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்புகள் உருவாகும். இது, முதல்வரின் இங்கிலாந்து பயணத்தின் முக்கியமான முன்னெடுப்பாகும்.

அதேபோல, அஸ்ட்ராஜெனகா நிறுவனம் 2 ஆண்டுகளில் தமிழகத்தில் 3 ஆவது தொழில் முதலீட்டை அறிவித்துள்ளது. சென்னையில் உள்ள அதன் உலகளாவிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப மையத்தை 176 கோடி இந்திய ரூபா முதலீட்டில் விரிவாக்கம் செய்கிறது. இங்கிலாந்தில் முன்னதாக உற்பத்தி, ஆடை தொழில்நுட்பம், வடிவமைப்பு கல்வி உள்ளிட்ட துறைகளில் 1,293 பேருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 820 கோடி இந்திய ரூபா முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்மூலம், முதல்வர் ஸ்டாலினின் ஜேர்மனி, இங்கிலாந்து பயணத்தால் தமிழகம் பெற்றுள்ள மொத்த முதலீடு 15,516 கோடி இந்திய ரூபா . இதன் வாயிலாக 17,613 பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வுகளின்போது, தமிழக தொழில், வர்த்தகம், முதலீட்டு ஊக்குவிப்பு துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முதல்வரின் செயலர் உமாநாத், தொழில் துறை செயலர் அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவன மேலாண்மை இயக்குநர் தாரேஸ் அகமது உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



# அ.தி.மு.க, பா.ம.க. குழப்பங்களுக்கு பா.ஜ.க. தான் முக்கிய காரணமாகும்

## செல்வப்பெருந்தகை குற்றச்சாட்டு

அ.தி.மு.க, பா.ம.கவில் நடக்கும் குழப்பங்களுக்கு பா.ஜ.கதான் முக்கிய காரணம் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தெதெரிவித்துள்ளார்.

நெல்லையில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கருத்து தெரிவிக்கையில்,

“வாக்கு என்பது ஒவ்வொரு தனி மனிதனின் அடிப்படை உரிமை. அந்த வாக்கு அதிகாரத்தை தேர்தல் ஆணையமும், பா.ஜ.கவும் சேர்ந்து பறித்து வருகின்றன. இதை மக்களுக்கு உணர்த்தும் வகையில் நெல்லையில் இன்று விழிப்புணர்வு மாநாடு நடத்துகிறோம். இந்த மாநாட்டில் அகில இந்திய காங்கிரஸ் பொறுப்பாளர் அஜய்குமார், முன்னாள் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்கிறார்கள்.

தமிழகத்தில் பாஜக கூட்டணி என்பது ஒரு மூழ்கும் கப்பல். மக்களால் நிராகரிக்கப்பட்ட கூட்டணி. மக்கள் எதிர்ப்பை உணர்ந்ததால்தான் டிடிவி.தினகரன் கூட்டணியில் இருந்து வெளியேறிவிட்டார். பா.ஜ.க. எங்கு இருக்கிறதோ, அங்கு சர்வ நாசம்தான் ஏற்படும். மகாராஷ்டிராவில் சிவசேனா,தேசியவாத காங்கிரஸ் கட்சிகளை உடைத்ததுபோல தமிழகத்தில் அ.தி.மு.க. 4 அணிகளாக சிதறிக் கிடப்பதற்கும், பா.ம.கவில் பிரச்சினை நீடிப்பதற்கும் பா.ஜ.கவே காரணம். யார் ஒன்று சேர்ந்தாலும் இண்டியா கூட்டணிக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. எங்கள் கூட்டணி வலுவாக உள்ளது.” என்று தெரிவித்தார்.

# ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்க மறுப்பு



ஐ.நா. சபை கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்க மறுத்துள்ளார் என தெரியவந்துள்ளது.

ஐ.நா. சபையின் 80 ஆவது பொதுச்சபைக் கூட்டம் நாளை மறுதினம் நியூயோர்க்கில் தொடங்குகிறது.

கூட்டத்தொடரில் உயர் மட்ட பொது விவாதம் செப்டம்பர் 23 முதல் செப் 29 வரை நடைபெறவுள்ளது. இந்தக் கூட் டத்தின்போது அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் 23 ஆம் திகதி பேச உள்ளார்.

முன்னதாக ஐ.நா. சபைக் கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்து கொள்ள இருப்பதாக கூறப்பட் டது. ஆனால் தற்போது இந்தியா வுக்கு 50 வீத வரி விதிக்கப்பட்டுள்ளதால் அமெரிக்காவுடன் ஏற்பட்ட மோதல் காரணமாக பிரதமர் மோடி அமெரிக்கா செல்ல மாட்டார் என தெரியவந்துள்ளது.

பிரதமர் மோடிக்கு பதில் இந்திய அரசு சார்பில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் பங்கேற்பார் என எதிர் பார்க்கப்படுகிறது.

தற்போதுள்ள நிலைப்பாட்டின் படி இந்தக் கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்பது உறுதிசெய்யப் படவில்லை. மேலும், பிரதமர் மோடி கூட்டத்தை புறக்கணிக்க முடிவு எடுத்துள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

அதாவது, பிரதமரின் பயணத் திட்ட அட்டவணையில் தற்போது வரை ஐ.நா. சபை பொதுக் கூட்டம் இடம்பெறவில்லை.

பிரதமர் மோடி நியூயோர்க் பயணம் மேற்கொண்டால் ஜனாதிபதி ட்ரம்பை சந்திக்கும் நிலை உருவாகும். இந்த சந்திப்பை தவிர்ப்பது நல்லது என்று மத்திய அரசு கருதுகிறது. விரைவில் அமெரிக்கா செல்ல உள்ள அமைச்சர் ஜெய்சங்கர் செப்டம் பர் 26 ஆம் திகதி உரையாற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




# காசாவின் உயரமான கட்டடத்தை தகர்த்து அழித்தது இஸ்ரேல் படை

இஸ்ரேலிய இராணுவம், காசா நகரில் மற்றுமொரு உயரமான கட்டடத்தை தகர்த்துள்ளது.

இது கடந்த சில நாள்களில், இஸ்ரேலிய படைகளால் தகர்க்கப்பட்ட இரண்டாவது பெரிய கோபுரம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ், இந்த கோபுர இடிவை தமது சமூக ஊடகத்தில் காணொலியாக காட்டி, 'நாங்கள் தொடர்கிறோம்' என்ற சொற்களை பதிவிட்டுள்ளார்.

முன்னதாக தமக்கு எதிரான தாக்குதல்களுக்காக ஹமாஸ் அமைப்பு சுசி கோபுரம் என்ற தம்மால் நேற்று அழிக்கப்பட்ட கோபுரத்தையே பயன்படுத்தி வந்ததாக, இஸ்ரேலிய தரப்பு தெரிவித்துள்ளது.

எனினும் அதனை ஹமாஸ் போராளிக் குழு மறுத்துள்ளது.

இந்தநிலையில் சுசி கோபுரத்தாக்குதலின்போது உயிரிழப்புகள் ஏற்பட்டதா என்பது உடனடியாகத் தெரியவில்லை.

இதேவேளை நேற்று சனிக்கிழமை தாக்குதலுக்கு முன்னதாக, பாலஸ்தீனியர்கள் தெற்கில் ஒரு மனிதாபிமான மண்டலம் என்று அழைக்கப்படும் இடத்திற்கு இடம்பெயர வேண்டும் என்று இஸ்ரேலிய படையினர் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர்.

இதன்படி, கான் யூனிஸுக்கும் கடற்கரையோரத்திற்கும் இடையிலான அல்-மவாசிக்கு பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் இடம்பெயர்ந்து வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# உக்ரைன் மீது 800 ட்ரோன்களை ஏவிய ரஷ்யா: போர் தொடங்கியதிலிருந்து மிகப் பெரிய தாக்குதல்

உக்ரைன் தலைநகர் கீவ் மீது ரஷ்யா 800 ட்ரோன்களை ஏவியுள்ளது. உக்ரைன் - ரஷ்யா மோதல் தொடங்கியதில் இருந்தே இதுதான் மிகப் பெரிய ட்ரோன் தாக்குதல் என்று கூறப்படுகிறது.

இத்தாக்குதலில் உக்ரைன் அரசு தலைமை அலுவலக கட்டடத்தின் மேல்தள பகுதியில் தீப்பிடித்து, புகை எழுந்தது. இதை சர்வதேச ஊடகவியலாளர்கள் உறுதி செய்துள்ளனர். 800 ட்ரோன்களை ஏவி தாக்குதல் நடத்தியுள்ளது ரஷ்யா. இந்த தாக்குதல் ஞாயிற்றுக்கிழமை நடந்துள்ளது.

இதுநாள் வரையில் கீவ் நகரில் அரசு கட்டடங்கள் மீதான தாக்குதலை ரஷ்யா தவிர்த்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஞாயிற்றுக்கிழமை அன்று ரஷ்யாவின் ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதலில் கீவ் நகரில் ஒரு வயது குழந்தை உட்பட இரண்டு பேர் உயிரிழந்ததாக தகவல் கிடைத்துள்ளது.

இந்த தாக்குதலில் கர்ப்பிணி உட்பட 11 பேர் காயமடைந்துள்ளனர் என உக்ரைன் அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். இதை கீவ் நகரின் நிர்வாக தலைவரும் உறுதி செய்துள்ளார். ரஷ்யாவின் தாக்குதலில் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்று சேதமடைந்துள்ளது. அதில் உள்ள மக்கள் வெளியேற முடியாமல் தவித்து வருவதாக தகவல் கிடைத்துள்ளது.



கடந்த இரண்டு வார காலத்தில் உக்ரைன் மீது ரஷ்யா மேற்கொண்ட மிக தீவிர ட்ரோன் தாக்குதலில் இது இரண்டாவதாக அமைந்துள்ளது. தீ பற்றிய அரசு தலைமையக அலுவலக கட்டிடத்தில் உக்ரைன் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் வசிப்பதாக தகவல்.

இந்த தாக்குதலுக்கு பதிலடி தரும் வகையில் ரஷ்யாவில் உள்ள பிரையன்ஸ்க் பகுதியில் அமைந்துள்ள எரிசக்தி உள்கட்டமைப்பை சிதைக்கும் வகையில் எண்ணெய் குழாய் வழிதடத்தை ட்ரோன் மூலம் உக்ரைன் தாக்கியது. இதை உக்ரைனின் ட்ரோன் படை தளபதி ராபர்ட் ப்ரோவ்டி உறுதி செய்துள்ளார்.

கனடா முரசு
ஞாயிற்றுக்கிழமை | 07/09/2025

**கனடாவில் வேலைவாய்ப்பு சந்தை இரண்டாவது மாதமாகவும் வீழ்ச்சி**



03



# தற்காலிக பணியாளர் திட்டத்தினை நிறுத்துவதன் மூலம் பாதிப்பு ஏற்படும்

## கனடா பணி வழங்குவோர் சிலர் கருத்து

தற்காலிக வெளிநாட்டுப் பணியாளர் திட்டத்தை நிறுத்தினால் பாதிப்பு ஏற்படும் என கனடா பணி வழங்குவோர் சிலர் கருத்து தெரிவித்துள்ளார்கள்.

கனடா தனது தற்காலிக வெளிநாட்டுப் பணியாளர் திட்டத்தை உடனடியாக நிறுத்தவேண்டும் என கனடா எதிர்க்கட்சித் தலைவரான Pierre Poilievre வலியுறுத்தியுள்ளார்.

03






# காலிஸ்தான் தீவிரவாத குழுக்களுக்கு கனடாவிடமிருந்து நிதியுதவி சென்றது

## ஆய்வு முடிவில் அறிவிப்பு

‘2025 கனடாவில் சட்டவிரோத பணப்பரிமாற்றம் மற்றும் தீவிரவாதக் குழுக்களுக்கு நிதியுதவி இடர்பாடுகள்’ என்ற பெயரில் ஒரு ஆய்வு முடிவு வெளியாகியுள்ளது.

ஆய்வு முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையில் கனடாவில் உள்ள பப்பர் கல்சா இன்டர்நேஷனல், சர்வதேச சீக்கிய இளைஞர் ஒருங்கிணைப்பு ஆகிய 2 காலிஸ்தான் தீவிரவாதக் குழுக்களுக்கு கனடாவிலிருந்து நிதியுதவி சென்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கனடாவின் ஒட்டாவா உளவு அமைப்பு இந்தத் தகவலை அரசுக்கு அனுப்பியுள்ளது.

கனடாவில் ஹமாஸ், காலிஸ்தான் தீவிரவாதக் குழுக்களான பப்பர் கல்சா இன்டர்நேஷனல், சர்வதேச சீக்கிய இளைஞர் ஒருங்கிணைப்பு அமைப்பு போன்ற தீவிரவாத அமைப்புகள் நிதி உதவி பெறுவதை உறுதிப்படுத்தியுள்ளதாக அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

# துப்பாக்கிச் சூடுடன் தொடர்புடைய 14 வயது சிறுவனை தேடும் பொலிஸ்



கனடாவின் டொரோண்டோவின் ஸ்கார்பரோ பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

14 வயது சிறுவன் டான்ஃபோர்த் வீதி மற்றும் எக்லின்டன் அவென்யு ஈஸ்ட் அருகிலுள்ள ஒரு வீடிற்கு சென்று துப்பாக்கி சூடு நடத்தியுள்ளார்.

இதில் 21 மற்றும் 22 வயதுடைய இரண்டு இளைஞர்கள் காயமடைந்தனர்.

சம்பவத்தின் பின்னர் தாக்குதல் நடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்ட சிறுவன் தப்பிச் சென்றுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிசார் காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

இருவரும் தீவிர காயமடைந்திருந்தாலும், உயிருக்கு ஆபத்தில்லை என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இளைஞர் குற்றவியல் சட்டத்தின் கீழ் சிறுவர்களின் அடையாளம் வெளியிடப்படக்கூடாது. ஆனால் நீதிமன்ற அனுமதியுடன் பொலிசார் குறித்த சிறுவனின் பெயரும் படத்தையும் வெளியிட்டுள்ளனர்.

அவரின் பெயர் வாலென்டினோ பெத்தல் எனும் இவர் மீது கொலை முயற்சி இரண்டு குற்றச்சாட்டுகள், கொலை நோக்கத்துடன் துப்பாக்கி சூடு உள்ளிட்ட 11 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஆறு அடி ஒரு அங்குல உயரம், 150 பவுண்ட் எடை கொண்ட இவர் “ஆயுதம் ஏந்திய ஆபத்தான நபர்” என பொலிசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



# கனடாவில் வேலைவாய்ப்பு சந்தை இரண்டாவது மாதமாகவும் வீழ்ச்சி

கனடாவில் வேலைவாய்ப்பு சந்தை தொடர்ந்து இரண்டாவது மாதமாக வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

இதன் விளைவாக வேலை இழப்பு விகிதம் 2016 மே மாதத்திற்குப் பிந்தைய மிக உயர்ந்த நிலைக்கு (கொரோனா காலத்தைத் தவிர்த்து) உயர்ந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளது. ஆகஸ்ட் மாதத்தில் 66,000 வேலை வாய்ப்புகள் இழக்கப் பட்டதனால், வேலை இழப்பு விகிதம் 7.1 வீதமாக உயர்ந்துள்ளது.

இது கடந்த 2021 ஓகஸ்ட் மாதத்திற்குப் பின்னர் பதிவான மிக மோசமான பதிவாகும் என தெரிவிக்கப்படுகின்றது.

ஜூலை மாதத்திலும் 41,000 வேலைகள் இழக்கப்பட்டிருந்ததுடன், அப்போது வேலை இழப்பு விகிதம் 6.9 வீதமாக பதிவாகியிருந்தது.

ஓகஸ்ட் மாதத்திற்கான முன்னறிவிப்பில், பொருளாதார நிபுணர்கள் 10,000 வேலைகள் அதிகரிக்கும் என்றும், வேலை இழப்பு விகிதம் 7 வீதமாக இருக்கும் என்றும் எதிர்பார்த்திருந்தனர்.

எனினும் வேலை இழப்பு எண்ணிக்கை அதிகரித்திருந்தது.

---

## தற்காலிக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்காலிக வெளிநாட்டுப் பணியாளர் திட்டத்தால் கனேடிய பணியாளர்கள் மற்றும் இளைஞர்களின் வேலைவாய்ப்புகள் பறிக்கப்படுவதாகவும், ஊதியங்கள் மீது அது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் அவர் குற்றச்சாட்டுகள் முன்வைத்துள்ளார்.

ஆனால், தற்காலிக வெளிநாட்டுப் பணியாளர் திட்டத்தை நிறுத்தினால் கிராமப்புற சமுதாயத்தினருக்கு பாதிப்பு ஏற்படும் என கனடா பணி வழங்குவோர் சிலர் கருத்து தெரிவித்துள்ளார்கள்.

நோவா ஸ்கொஷியாவிலுள்ள Victoria Co-operative Fisheries என்னும் நிறுவனத்தின் பொது மேலாளரான Osborne Burke என்பவர், கனடா எதிர்க்கட்சித் தலைவரான Pierre Poilievreக்கு, கிராமப் புறங்களில் வேலை காலியிடங்களை நிரப்ப பணி வழங்குவோர் படும் பாடு புரியவில்லை என்பதையே அவரது கூற்று காட்டுவதாக தெரிவித்துள்ளார்.

நான் Pierre Poilievre இடம் கேட்கிறேன், வேலை தேடிக்கொண்டிருப்பதாக அவர் கூறும் பணியாளர்கள் எங்கே? உண்மை என்னவென்றால், வேலைக்கு ஆட்கள் கிடைக்கவில்லை என்கிறார் Burke.

மேலும், Pierre Poilievre இன் கூற்று, தங்கள் குடும்பங்களுக்கு உணவளிப்பதற்காக வேலை செய்யும் புலம்பெயர்ந்தோருக்கு நன்மை செய்வதைவிட அதிகம் தீமைதான் செய்வதாக உள்ளது என்கிறார் நோவா ஸ்கொஷியாவிலுள்ள புலம்பெயர்தல் மையம் ஒன்றின் எக்சிகியூட்டிவ் இயக்குநரான Stacey Gomez.

புலம்பெயர்ந்தோர், கனேடிய இளைஞர்களின் வேலையைப் பறிப்பதாக Pierre Poilievre கூறுவது ஆதாரமற்றது என்று கூறும் அவர், நோவா ஸ்கொஷியாவைப் பொருத்தவரை புலம்பெயர்ந்தோர் விவசாயம், மீன் பண்ணைகள் மற்றும் ட்ரக் தொழிலில் மட்டுமே ஈடுபடுகிறார்கள்.

இந்த பணிகளை, அதுவும் கோடைக் காலத்தில் செய்ய எந்த கனேடிய இளைஞரும் முன்வருவதில்லை அவர் என்கிறார்.